பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 02 வெள்ளிக்கிழமை (18-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 244

### கதிர்காமர் முறைப்பாடு

கொழும்பு - ஒக். 18

சிறிலங்காவில் பணியாற்றும் ஐ.நா. அதிகாரிகளில் சிலரது நடவடிக்கைகள் தமக்குத் திருப்தியளிக்கவில்லை என சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐ.நா. செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு முறையிட்டுள்ளார் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (உ - 10)

# தெற்கு கிளர்ச்சியாளர்களை ராணுவத்தில் சேர அழைப்பு!

## தளபதி தளுவத்த வேண்டுகோள்

கொழும்பு, ஒக்ரோபர். 18

**"தென்னிலங்கையில் முன்னர் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள்— 'தாய்நாடு அல்லது மரணம்' என்று சுவரொட்டி ஒட்டி போராட்டம் நடத்தியவர்கள் — இப்போது தாய் நாட்டைக் காக்கும் போராட்டத்துக்காகப் படைகளில் இணைய வேண்டும்."**

**— இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த.**

இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பது தொடர்பாக நேற்று இராணுவத் தளபதி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார் என்றும் —

அந்த மாநாட்டிலேயே மேற்படி அழைப்பை அவர் விடுத்தார் என்றும் —

பி. பி. ஸியின் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது.

இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதில் சிக்கல் தோன்றியுள்ள நிலையில் இந்தப் பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பத்திரிகையாளர்களே அழைக்கப்பட்டனர். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் எவரும் அழைக்கப்படவில்லை.

தற்போது நடைபெறும் யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர இளைஞர்களை இராணுவத்தில் சேரும்படி இராணுவத் தளபதி இந்த மாநாட்டில் அழைப்பு விடுத்தார்.

தளபதி கூறியவை

யுத்தத்தில் வெற்றி பெற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைக!

### கொழும்பில் ஜே. வி. பி. சுவரொட்டி

கொழும்பு, ஒக். 18

தலைநகர் கொழும்பிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் ஆயுதங்களுடன் இயங்கிவரும் தமிழ்க் கட்சிகள், குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் சுவரொட்டிகளை ஜே. வி. பி. அமைப்பு நகரில் பரவலாக ஒட்டியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது, அந்தப்படையை வெளியேற்றுமாறு கோரும் கோரிக்கையை ஜே. வி. பியே தீவிரமாக முன்வைத்தது என்பதும் —

அந்தக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பு மற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழர் விவகாரம்: கருணாநிதி - குஜ்ரால் பேச்சு

டில்லி சென்ற தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து விரிவாகப் பேச்சு நடத்தினார்.

அடுத்தவாரம் கொழும்பு செல்லவிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் குஜ்ரால், போகும் வழியில் சென்னையில் தரித்து மீண்டும் தமிழக முதல்வருடன் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து விரிவாகப் பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்பட்டது. (உ-3)

## பேச்சு மூலமான தீர்வையே ஐ. தே. க. விரும்புகின்றது

### ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 18

சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே ஐ. தே. க. விரும்புகின்றது என்பதையும் —

இதுவரையில் நாட்டை ஆண்டுவந்த ஒரு கட்சி என்ற வகையிலும், இனிமேல் எதிர்காலத்தில் ஆட்சி நடத்தவுள்ள கட்சி என்ற வகையிலும் தமது கட்சி பொறுப்புணர்வுடன் ஆக்கபூர்வமாக ஜனநாயகப் பாதையில் செயற்படும் என்பதையும் —

தம்மை லண்டனில் சந்தித்த அனைத்து தரப்பினரிடமும் தாம் வலியுறுத்தியதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தமது கட்சிப் பிரமுகர்களிடம் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகளிலும் சேருவோருக்கு மேலும் சலுகைகள் என அறிவிப்பு

லண்டன், ஒக். 18

படைகளில் சேருவோரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குக் கூடுதல் சலுகைகளை வழங்கும் அறிவிப்புகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று விடுத்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

தற்போது இராணுவத்தில் பணிபுரியும் சிப்பாய்க்கு சராசரியாக ஏழாயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்படுகின்றது.

அது தவிர இராணுவ சேவையை முடித்துக்கொண்ட பின்னர் அவர்களுக்கு அரச சேவையிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிலும் முன்னுரிமை வழங்கப்படும் என்று ஜனாதிபதி தற்போது அறிவித்திருக்கின்றார்.

அத்தோடு இராணுவத்தில் உள்ளவர்களுக்கு வேறு முக்கிய விசேட சலுகைகள், அவர்களது குடும்பத்தினருக்கான உதவிகள் என்பன வழங்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு!

### அதற்கு மேலும் 15,000 துருப்புக்கள் தேவையாம்

கொழும்பு, ஒக். 18

அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை கிளிநொச்சியிலிருந்து வவுனியாவை நோக்கிய காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாக 15 ஆயிரம் துருப்புகள் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் மேஜர் ஜெனரல் லால் வீரசூரியா நேற்று முன்தினம் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்த நடவடிக்கைக்காகவும் —

ஆண்டு தோறும் இராணுவத்தை விட்டு இளைப்பாறிச் செல்வோர், உயிரிழப்போர் மற்றும் ஊனமுறுவோர் ஆகியோரின் இடங்களை நிரப்புவதற்காகவும் —

மேலும் துருப்புகள் தேவைப்படுவதாக மேஜர் ஜெனரல் லால் வீரசூரியா கூறினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஏற்பாடுகள் மன்னார்த் தீவில் தீவிரம்

கொழும்பு, ஒக். 18

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார்த் தீவில் படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு கடந்த சிலகாலமாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதை அடுத்து —

மன்னார்த்தீவில் மன்னாருக்கும் பேசாலைக்கும் இடையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக மன்னார் புதுக் குடியிருப்பு ஊடாக நடைபெற்று வந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதுடன் அப்பாதையும் மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அத்தியாவசிய உணவு பொருள்களில் 41 வீதமே இங்கு வந்து சேருகின்றது

கொழும்பு, ஒக். 18

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மாதாந்தம் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களில் கப்பல் மூலம் 41 சத வீதத்தை மட்டுமே கொண்டுவந்து சேர்க்க முடிகிறதாம்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் உள்ள வசதிக் குறைவுகளினாலேயே இந்த நிலை தோன்றியதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது வாழும் மக்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தேவைப்படுகின்றன.

ஆனால் காங்கேசன் துறைமுகத்தில் மாதாந்தம் 5 ஆயிரம் தொன் உணவுப் பொருள்களை மட்டுமே இறக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்துக்கு அரசாங்கம் தருவிக்கும் பொருள்கள் காங்கேசன்துறைமுகத்தில் இறக்கப்படுகின்றன.

தனியார் துறையினர் தருவிக்கும் பொருள்கள் பருத்தித்துறையில் இறக்கப்படுகின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா முன்பிணை; 7 மனுக்களும் நிராகரிப்பு

சென்னை, ஒக். 18

முன்னாள் தமிழக முதலமைச்சரும், அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா தமக்கு எதிரான ஏழு வழக்குகள் தொடர்பாக முன்பிணை அனுமதி கோரி தாக்கல் செய்திருந்த மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தலைமைப் பீடத்துக்கு எதிராக மேலும் பல வழக்குகள்?

### தாக்கல் செய்ய அரசு தயாராகி வருகிறதாம்

கொழும்பு, ஒக். 18

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்கு எதிராக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மேலும் பல வழக்குகளைத் தாக்கல் செய்யவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்குகளின் வரிசையில் முதலாவதே விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், இயக்கத்தின் புலனாய்வுத் தலைவர் பொட்டு அம்மான் உட்பட 10 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் — மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல் — வழக்காகும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பல வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும்—

அவை பூர்த்தியானதும் வழக்குகள் தாக்கலாகும் என்றும் தெரியவந்தது. (உ-3)

## குடும்பத்துக்கு 3 லீற்றர் ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 18

''சில்க் றூட்'' கப்பலில் வந்துள்ள மண்எண்ணெய் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 லீற்றர் என்ற பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்பட இருப்பதாக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் தெரிவித்தார்.

ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் இந்த விநியோகத்தை உடன் மேற்கொள்ள ஏற்பாடு செய்யுமாறு பிரதேச செயலகங்களை யாழ். செயலகம் கேட்டுள்ளது என்றும் —

வாகனங்களுக்கும், பொதுத் தேவைகளுக்கும் அந்தந்தப் பிரதேச செயலர்களின் அனுமதிப் பத்திரத்துடன் மட்டும் ப.நோ.கூ. சங்கங்களிலும், தனியார் விற்பனை முகவர்களிடமும் மண்எண்ணெயைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் —

அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

## பழைய மாணவர் சங்க தலைவராக அதிபர்கள்

### கல்வி அமைச்சு சுற்றறிக்கை

வலிகாமம் தெற்கு, ஒக். 18

''பாடசாலை அதிபர்களே அவ்வப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருக்க வேண்டும்.''

இவ்வாறு கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம்.டி. டி. பீரிஸ் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாககோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பழைய மாணவர் சங்கங்கள் நிறுவுதல் தொடர்பாக 1964 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய செயற்பட்டு மேற்படி சங்கத்தின் யாப்பினைத் திருத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-152)

## சமய சந்நிதிகளில்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சிவபூதேஸ்வரர் ஆலயத்தில், மகா கும்பாபிஷேகத்தின் பின்னர் நடைபெறும் மண்டலாபிஷேகத்தை ஒட்டிய சங்காபிஷேகம் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (அ)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு புங்கன் குளம் வீதி. வில்லவயடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் மு ப 9 மணி தொடக்கம் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் விஜயதசமியை ஒட்டிய விசேட அபிஷேகம், பூசைகள் நடைபெறும் நாடு நலம் பெற, மக்கள் மன நிம்மதியுடன் வாழக் கூட்டுப்பிரார்த்தனையும் அன்று இடம் பெறும் (அ-30)

## வடக்கு நோக்கி 3 கப்பல்கள் இன்று புறப்படும்

கொழும்பு ஒக். 18

வடபகுதிக்குச் செல்லும் பயணிகளை ஏற்றிக்கொண்டு மூன்று கப்பல்கள் இன்று திருகோணமலையிலிருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக திருகோணமலைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பல்களில் செல்வதற்காக மேலும் 71 பேர் வவுனியாவில் இருந்து திருகோணமலை வந்து சேர்ந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

## உடற்கல்வியும் விளையாட்டும் கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் உடற்கல்வியும் விளையாட்டுகளும் (தொகுதி மூன்று) எனும் அடிப்படைக் கற்கை நெறியின் ஆரம்ப நாள் நிகழ்ச்சியானது நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கற்கை நெறியைப் பயில்வதற்கு யாழ். குடாநாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகளிலே உடற்கல்வித் துறை சார்ந்த ஆசிரியர்கள் பலர் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் மூன்று தொகுதியினருக்கு தொடர்பாடலுக்கான ஆங்கில வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கற்கை நெறி பல தொகுதிகளாகத் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளதாக புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ-4)

## நவராத்திரி விழாக்கள்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் ஆதீன முதல்வர் தலைமையில் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன.

விஜயதசமி தினமான திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை சிறுவர்களுக்கு ஆதீனத்தில் ஏடு தொடக்கப்படும் (அ-30)

★ ★ ★

யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்கள இந்து மன்றத்தினர் நடத்தும் வாணி விழா இன்று நடைபெறும்.

மன்றத் தலைவர் வி. எஸ் சிவரட்ணம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பட்டிமண்டபம் இன்னிசைக் கச்சேரி, வில்லுப்பாட்டு ஆகியனவும் இடம் பெறும். (அ-3)

★ ★ ★

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நவராத்திரி விழாவும் நூல் நிலைய அறிமுக விழாவும் நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ள இவ் விழாவில், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ். கே. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ-90)

★ ★ ★

யாழ். ஆனைப்பந்தி ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலை நவராத்திரி விழா இன்று மு. ப 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (அ-4)

★ ★ ★

யாழ். கல்வி வலயம் ஒன்றின் நவராத்திரி விழா திங்கட்கிழமை மு. ப. 10 மணிக்கு இடம் பெறும்.

கல்வித் திணைக்கள நலன் புரிக்கழகம் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (அ-51)

★ ★ ★

யாழ். கல்வி வலயம் ஒன்றின் கீழ், கோவில் வீதியில் இயங்கும் கோட்டஅலுவலகத்தில் நவராத்திரி விழா இன்று நடைபெறும். (அ-51)

★ ★ ★

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை நவராத்திரி விழா திங்கட்கிழமை நடைபெறும்.

சங்கானை கல்விக் கோட்டத்தினால் நடத்தப்பட்ட சமயப் போட்டியில் பங்குபற்றிய பாடசாலைமாணவர்களுக்கு, விழாவில் வைத்து, கோண்டாவில் அமரர் சின்னத்துரை இராசேந்திரம் ஞாபகார்த்தப் பரிசில்கள் வழங்கப்படும். (அ-30)

★ ★ ★

நல்லூர் சிவன்கோயிலில் சாரதா நவராத்திரியை முன்னிட்டு வழமையான அபிஷேகம், பூசைகளுடன் இலட்சார்ச்சனை, கடஸ்தாபனம், ஸ்ரீசக்கர யந்திர பூசை என்பன இன்று இடம்பெறும். (அ-30

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 18

கள் சீவுவதற்காக பனை மரத்தில் ஏறியவர் மேலிருந்து தவறிவிழுந்து மரணமானார்.

கொக்குவில் பொற்பதி வீதியில் நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை சந்திரன் (வயது 34) என்பவரே உயிரிழந்தவராவார்.

சீவல் தொழிலாளியான இவர் பனைமரத்தில் ஏறி மேலே சென்று மட்டை ஒன்றைப் பிடித்தார் என்றும்—

அது மரத்திலிருந்து பிடுங்குப்பட்டதால் அவர் தவறி விழுந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு சிகிச்சைக்குட்படுத்திய வேளையே அவர் மரணமானார். (உ-15)


## நினைவு கூருகின்றோம்



### யோகீஸ்வரன் நிருத்தன்

(யாழ். இந்துக்கல்லூரி மாணவன்)

தோற்றம்: 1977–04–06 மறைவு: 1996–08–19

இன்னருள் புரியும் இறைவன் அருளால்
எம்மிடை தோன்றிய இளையவனே!
நிருத்தனே! நிமலா! நீ எங்குற்றாய்?
அழகிய தெய்வீக உருவமே!
கொழும்பு மாநகரிலே காசல்
மருத்துவமனையிலே அவதரித்தாய்!
எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டாய்!
யாழ். இந்துக் கல்லூரியிலே கல்வி பயின்று
விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டினாய்!
யாழ்ப்பாணத்துக் கோயில்களில் உன்
காலடி படாத இடமேயில்லை!
எங்கும் நிழல்போல் தெரியும் எங்கள் செல்வமே!
இளமுருகனைப் போல் எம் மனக்
கோயில் புகுந்து விட்டாயடா!
உன் உடல் அழிந்தாலும் எழிலான
சிவந்த உருவம் எம் மனதை விட்டு நீங்காது!
இளவயதிலேயே இறைவனடி சேர்ந்து விட்ட
எம் அரிய செல்வமே!
உன்னை நினைத்து உருகும் அம்மாவின்
இதயக் கோயிலில் என்றும் நிலைத்திருப்பாய்
இராசாவே!

அழகிய ரோஜாப் பூவாய்ச் சிரிப்பாயே!
எந்தப் பிறவியில் உன்னை இனிக் காண்போம்?
சின்னப் பூவே நீ வாட மாட்டாயடா!
இறைவனடி சேர்ந்து விட்டாயடா!
மண்ணுலகுக்கு விருந்தளித்த நீ
விண்ணுலகுக்கு விருந்தளிக்கப் போய் விட்டாயா?

உன் பிரிவால் வாடும்:
அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(சி/3295)

# ராஜா கல்வி நிலையம்

(தவராசா ஆசிரியரின் இல்லம்)

## க.பொ.த (சா.த) டிசெம்பர் 1996 பயிற்சிப்பரீட்சை

இடம்:- ராஜா கல்வி நிலையம்,
நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.

காலம்:- 27–10–96 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம்
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்.

பாடங்கள்: கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி,
ஆங்கிலம், தமிழ், இந்துசமயம்.

எந்தப் பாடசாலை மாணவரும் பங்கு பற்றலாம். விடைத்தாள்கள் பிரபல ஆசிரியர்களால் புள்ளியிடப்பட்டு ஒரு கிழமைக்குள் வழங்கப்படும்.

கல்வி நிலையங்களும், பெற்றோர்களும் விரும்பினால் வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம், விடைத்தாள்கள் புள்ளியிட்டுக் கொடுக்கப்படும். 23–10–96 இற்கு முன்னர் மேலதிக விவரங்களுக்கு என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. செ. தவராசா (கணித ஆசிரியர்)
நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.

## ராஜா கல்வி நிலையம்

நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.

### துரித மீட்டல் வகுப்புக்கள்

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை

பாட ஆசிரியர்கள்

கணிதம், விஞ்ஞானம் — திரு. தவராசா, செல்வி. கிருபாலினி
ஆங்கிலம் — திரு. ஜெயராசா, திரு. வாசவன்
தமிழ் — திரு. தங்கவேல், திரு. சந்திரசேகரன்
சமூகக்கல்வி — திரு. குணசிங்கம், திரு. பகிர்ராஜ்
வர்த்தகமும் கணக்கியலும் — திரு. அற்புதராஜா

★ மீட்டல் வகுப்பில் பங்கு பற்றுவோர் உடன் பதிவு செய்யவும். (8925)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சபாரட்ணம் கிருஷ்ண மூர்த்தி என்பவரின் 550242443 V இலக்க அடையாள அட்டை, வல்லை - நெல்லியடிக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய், கரவெட்டி எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(43208)

### O/L கணிதம்

1100 வினாக்கள் மூலம் விரைவாக Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். B.Sc ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி.

(43197)

### புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி.

(43084)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை.

(43209)

### மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தைச்சேர்ந்த விவாகரத்துப் பெற்ற, 57 வயதுடையவருக்கு, நற்குணமும் நற்பழக்கங்கழுமுடையமணமகள் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: மே/பா இல. 547, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

43213)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 09 — 1923

மறைவு: 01 — 10 — 1995

### அமரர் கந்தன் தம்பு

திதி: 18—10—1996

ஊரைவிட்டு நாம் பிரிந்தும் உம்நினைவே எம்மனதில்
நாலிரண்டு மாதம் சென்று தானறிந்தோம்
உம் இறப்பை
சொல் ஒன்று சொல்லாமல் கவர்ந்ததேனோ
உன் உயிரை
கடமை செய்ய முடியலையே கலங்குகின்றோம்
கண்மணிகள்.

உம் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

த. இரத்தினசிங்கம்,
நாவற்காடு, அச்சுவேலி.

(8924)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவபபடுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என்வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு, இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும், என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

த. தி

(43211)


பெருங்குளம் பிள்ளையார் துணை

## திருமணம்



அன்புடையூர்!

நிகழும் மங்களகரமான தாத்ரு வருடம் ஐப்பசித் திங்கள் 2ஆம் நாள் இன்று (18-10-1996) முற்பகல் 10-48 மணி முதல் 1-16 மணி வரையுள்ள துலாலக்ன சுபமங்கள சுபமுகூர்த்த வேளையில்

சாவகச்சேரி பெருங்குளம் சந்திடைச் சேர்ந்த திரு திருமதி நந்தகோபால் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **முரளிதரன்** அவர்கட்கும்



திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த அமரர் சீவரத்தினம், திருமதி சீவரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **ருக்ஷினி** அவர்கட்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்த திருவருள் பாலித்துள்ளது.

திரு திருமதி வெ நந்தகோபால்
103/11, மருதானை வீதி,
கெந்தளை, வத்தளை.

திருமதி செ. சீவரத்தினம்
30/4, ஸ்ரீ இராமநாதன் தெரு,
கொழும்பு - 13.

திருமணம் நடைபெறும் இடம்: OLTEN மனோன்மணி அம்மன் ஆலயம் [Holder Matt Str. - 3] சுவிற்சலாந்து.



[43217]


## நோயாளர் கவனத்துக்கு

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பு செல்வதற்காக யாழ். வைத்திய சாலைப் பணிப்பாளரிடம் பெயர்களைப் பதிவு செய்த நோயாளர்கள் அனைவரும் தமது பயணத்தை உறுதிப்படுத்துவதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை பணிப்பாளர் பணிமனையில் சமுகமளிக்கும்படி யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளது.


## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

## A|L - 96 DAY CLASS

கலை, வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| கணக்கியல் | — | பிரபல ஆசிரியர் |
| பொருளியல் | — | திரு. ராஜேஸ்வரன். |
| அளவையியல் | — | திரு. R. P. சர்மா |
| தமிழ் | — | திரு. அருந்தவநாதன் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | ] | திரு: சிவாநந்தன் |

ஆரம்பம்: **19 - 10 - 96** [சனி 9. 00 A. m]

(43216)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1996 - 11 - 20 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதவிகள்:**

துடுப்பாட்டம்/ உதைபந்தாட்டம்/ வளைகோட் பந்தாட்டம் (ஆண்கள்)/ மெய்வல்லுநர் பயிற்சிகள் (ஆண்கள்)/ பூப்பந்தாட்டம் (ஆண்கள், பெண்கள்)/ சதுரங்கம் (ஆண்கள், பெண்கள்)/ கரபந்தாட்டம் (ஆண்கள்)/ மேசைவரிப்பந்தாட்டம் (ஆண்கள், பெண்கள்)/ வரிப்பந்தாட்டம் (ஆண்கள்)/ உடற்பயிற்சி விளையாட்டுக்கள் (ஆண்கள்)/ தாச்சி (ஆண்கள், பெண்கள்)/ கராட்டி (ஆண்கள்) இல் இடைவரவுப் போதானாசிரியர்.

**கொடுப்பனவு விகிதம்:**

மணித்தியாலம் ஒன்றிற்கு 75/- ரூபா. (மாதமொன்றுக்கு 900/-ரூபா உச்ச வரம்பிற்கு உட்பட்டு)

**தகைமைகள்:**

1. தேசிய அணியொன்றையோ, மாவட்ட அணியொன்றையோ, தேசியப் பாடசாலை அணியொன்றையோ, இணைந்த பாடசாலை அணியொன்றையோ பிரதிநிதித்துவப் படுத்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

2. மாவட்ட அணியையோ, மாவட்ட இணைந்த அணியையோ, மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலத்திற்குப் பயிற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது

3. விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பயிற்றுநராக குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்குப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4. பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டுக்களைப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

5. பாடசாலையொன்றில் அல்லது கனரியொன்றில் ஐந்தாண்டுப் பயிற்றுதல் அனுபவத்துடன் குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்கு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டியொன்றில் வீரமுதல்வரை அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றவரை உருவாக்கியிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது நிதிக் கிளையில் சிறாப்பரின் கரும பீடத்தில் 20/- ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணபித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபாவுக்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையொன்றை 23X10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட 2/- ரூபா முத்திரை யொட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந் நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் எழுதப்பட்ட விண்ணப்பங்களும்நிராகரிக்கப்படும்.

குறிப்பு:- சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்;

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1996-10-11

(சி/3299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி அமைக்க

# பாரதீய ஜனதா கட்சியின் கோரிக்கை நிராகரிப்பு!

லக்னோ. ஒக். 18

உத்தரப் பிரதேச மாநிலத்தில் அரசமைக்க பாரதீய ஜனதாக் கட்சி ஆளுநரிடம் முன் வைத்த கோரிக்கையை ஆளுநர் ரமேஷ் பண்டாரி நிராகரித்து விட்டார்.

வேறு எந்தக் கட்சியும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு வெளிப்படையான ஆதரவை வழங்க முன் வராததால் பெரும்பான்மையைத் தங்களால் நிரூபிக்க முடியும் என்ற பாரதீய ஜனதாக் கட்சியின் வாக்குறுதியைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என ஆளுநர் தெரிவித்தார்.

இதற்கிடையில் பகுஜன் சமாஜ் கட்சித்தலைவர் மாயாவதி அரசு அமைக்க ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்காவிடின் மத்தியில் ஐக்கிய முன்னணி அரசுக்கு காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக் கொள்ளும் என்ற காங்கிரஸ் தற்காலிகத் தலைவர் சீதாராம் கேசரியின் மிரட்டலை ஐக்கிய முன்னணி பெரிது படுத்தவில்லை எனத் தெரிகிறது.

வெளியே வீரம் பேசினாலும் தற்போதைய நிலையில் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதால் காங்கிரஸுக்கு நட்டத்தைத் தவிர இலாபம் இருக்காது என கட்சி உள் வட்டாரங்கள் கருதுவதாகக் கூறப்படுகிறது. தெளிவற்ற இழுபறி நிலை உத்தரப் பிரதேச மாநிலத்தில் நிலவுகிறது. (இ-10)

## உலக அரங்கில்

### தலிபான் படை விமானக் குண்டு வீச்சு

ஆப்கானிஸ்தானில் தலிபான் படையினர் விமானக் குண்டுத் தாக்குதலை நடத்தியதில் 4 சிறுவர்கள் உட்பட 9பேர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் பல வீடுகளும் சேதமடைந்தன.

ஆப்கான் மருத்துவமனை ஒன்றைச் சேர்ந்த டாக்டர் மொகமட் ஆஸீஸ் என்பவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்த தகவலில், 500 இறாத்தல் எடையுள்ள இரண்டு குண்டுகள் ஜெட் விமானத்தில் இருந்து போடப்பட்டதில் கடந்த திங்கட்கிழமை 2 ஆண்கள், 3 பெண்கள், 4 சிறுவர்கள் கொல்லப்பட்டனர் என்று கூறினார்.

இதே வேளை — முன்னாள் அரச படைகள் தலிபான் இராணுவத்தினரிடம் இருந்து முக்கிய இராணுவ தளமான பக்தாமை மீண்டும் கைப்பற்றியுள்ளன. (இ-3)

### ★ உலகக் கிண்ண

## உதைபந்தாட்டப் போட்டியில் 75 ரசிகர்கள் நசுங்கி மரணம்

கௌதமாலா ஒக். 18

மத்திய அமெரிக்க நாடான கௌதமாலாவுக்கும் கோஸ்ரறிக்காவுக்கும் இடையில் நேற்று முன்தினம் கௌதமாலாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத்துக்கான தகுதிகாண் உதைபந்தாட்ட போட்டியின் போது ஏற்பட்ட குழப்பம் காரணமாக 75 பேர் மூச்சுத் திணறி இறந்தனர். பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தனர்.

இந்த உதைபந்தாட்டப் போட்டியை கண்டுகளிக்க இரு நாடுகளின் பிரதமர்களும் வருவதாக இருந்தது.

உதைபந்தாட்டம் நடைபெற்ற விளையாட்டு அரங்கு 45 ஆயிரம் பேரை மட்டுமே கொள்ளக் கூடியது. போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே விளையாட்டு அரங்கு நிறைந்து வழிந்தது.

மேலும் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் போட்டியைக் கண்டுகளிக்க விளையாட்டு அரங்கினுள் பிரவேசிக்க முயன்ற போது விளையாட்டு அரங்கில் கடமையிலிருந்த பணியாளர்களால் அவர்கள் தடுக்கப்பட்டனர். இதையடுத்தே குழப்பம் ஆரம்பமானது

இதையடுத்து இப்போட்டி இடை நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (இ-10)

## காபூலுக்கான யுத்தம் எந்நேரமும் மூளலாம்

ஆப்கன் தலைநகர் காபூலுக்கு அருகில் உள்ள அதி முக்கியமான பக்ராம் விமானத் தளத்தை பதவி கவிழ்க்கப்பட்ட ரபானியின் தளபதி அஹமட்ஷா மசூதின் படைகள் கைப்பற்றியுள்ளன.

காபூல் நகருக்கான இறுதி யுத்தம் எந்த வேளையிலும் தொடங்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. இதனை எதிர்பார்த்து நாட்டின் பிற பகுதிகளிலுள்ள தனது வீரர்களை தலிபான் குழு ஆயிரக் கணக்கில் காபூல் நகரில் குவித்துள்ளது.

தடுமாறி நிற்கும் தலிபான் குழு வடக்கு ஆப்கன் தலைவர் அப்துல் ரஷீத் டோஸ்ரமுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தத் தூதுவர்களை அனுப்பியுள்ளது.

ஜெனரல் டோஸ்ரம் தளபதி மசூதுக்கும் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துள்ளார். (இ-10)

## உலக உணவு தினம்

றோம் ஒக். 18

உலக உணவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது பசி மற்றும் பற்றாக்குறை உணவு ஆகியவற்றுக்கு எதிரான போர் என்பது எதிர் வரும் ஆண்டின் இலக்கு என ஐ.நா. உணவு மற்றும் விவசாயப் பிரிவு நேற்று முன்தினம் அறிவித்தது

இந்த இலக்குக்கு திட்டச் செயல் வடிவம் வழங்க அடுத்தமாதம் 13 – 17 வரை றோம் நகரில் உலகத் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு ஐ.நா. ஏற்பாடு செய்துள்ளது

உலக உணவு தினத்தை முன்னிட்டு றோம் நகரில் திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வெளியிட்ட அறிக்கையில், ''நாம் வாழும் உலகில் சுமார் 8 ஆயிரம் இலட்சம் மக்கள் தினமும் பசி, பட்டினியுடன் போராடுகிறார்கள். அபரிமிதமான செல்வமுடையோர் ஒரு புறம் செல்வங்களை மேலும் மேலும் குவித்துக்கொண்டு இருக்க ஒரு வேளை உணவுக்கே வழியின்றிப் போராடுகிறவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது'' எனத் தெரிவித்தார். (இ 10)

## எயிட்ஸ் நோயாளருக்கு பிறேசிலில் இலவச மருந்து

பிறேசிலியா ஒக். 18

எயிட்ஸ் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்து வழங்க பிறேசில் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

எச்.ஐ.வி. நோய்க் கிருமிகளை உடலில் கொண்டிருக்கும் மக்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ள மருந்துக் கலவை இவர்களை எயிற்ஸ் நோய் தாக்குவதைத் தாமதப்படுத்தும்.

பிறேசில் நாட்டில் சுமார் 5 லட்சம் பேர் எச்.ஐ.வி. நோய்க் கிருமிகளை உடலில் கொண்டிருக்கின்றனர்.

கடந்த ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 76,396 பேர் அந் நாட்டில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-10)

# ஆட்சேபனையை பொருட்படுத்தாது பொலீஸார் பணிமனைக்குள் வந்தனர்

### திருமலைச் சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி. அறிக்கை

கொழும்பு ஒக். 18

பொலீசார் தமது எம்.பியின் ஆட்சேபனையையும் பொருட்படுத்தாது எமது பணிமனைக்குள் புகுந்து சோதனையிட்டனர்.

திருகோணமலைச் சம்பவங்கள் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

கடந்த 8 ஆம் திகதி திருகோணமலை நகரில் இனந் தெரியாத ஒருவரால் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் ஆரம்பித்தன.

இதற்கு அடுத்த நாளான 9 ஆம் திகதியன்று திருகோணமலையிலுள்ள எமது பணிமனை உட்பட தமிழ்க் கட்சிகளின் பணிமனைகள் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டன.

எமது பணிமனை சோதிக்கப்படுவதை ஆட்சேபித்த நாங்கள், இச்சம்பவத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம்.

எமது அமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான எஸ். சிவதாசன் திருகோணமலையில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளார்.

#### சத்தியாக்கிரகம்

கடந்த 10 ஆம் திகதி பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சிலர் சந்தைப் பகுதியில் கூடினர். தமிழ்க் கட்சிகள் திருகோணமலையிலிருந்து துரத்தப்பட வேண்டும் என குரலெழுப்பினர். அத்துடன் சத்தியாக்கிரகத்தையும் மேற்கொண்டனர்.

திருகோணமலை ரயில் நிலைய சோதனைச் சாவடியில் எமது அமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தங்கவேல் பொலீசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

தான் ஒரு நாடாளுமன்ற அங்கத்தவர் என்பதைத் தெரிவிக்கும் அடையாள அட்டையை பொலீசாரிடம் அவர் காட்டினார். ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எனத் தன்னை பொலீசாருக்கு அறிமுகப்படுத்திய போதிலும் விடுதலைப்புலிகளுக்கு ஒத்தாசை வழங்குகிறார் என பொலீசார் அவரை ஏசினர். இது மிகவும் தெளிவான பொய்யாகும்.

இதையடுத்து இதே பொலீசார் திருகோணமலையில் உள்ள எமது பணிமனையைச் சுற்றிவளைத்தனர்.

அப்போது எமது அமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சந்திரகுமார், எஸ். தங்கவேல் ஆகியோர் அங்கு இருந்தார்கள்.

#### துப்பாக்கிப் பிரயோகம்

எமது பணிமனையைச் சுற்றிவளைத்த பொலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். அதே வேளை பொலீசாருடன் வந்த கும்பல் வகுப்புவாதக் கூக்குரலை எழுப்பியவாறு கற்களை வீசின.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்க்காப்பாளர்கள், பொலீசாரை எமது பணிமனைக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. மூத்த பொலீஸ் அதிகாரி வந்தால் மாத்திரமே பொலீசாரைப் பணிமனைக்குள் நுழைய அனுமதிப்போம் என மெய்க்காவலர்கள் தெரிவித்தனர்.

பின்னர் ஒரு பொலீஸ் அத்தியட்சகரும் ஒரு இராணுவ மேஜரும் வந்து நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமாருடன் வந்து உரையாடினர்.

பொலீஸ் சோதனைச் சாவடியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட இளைஞன் ஒருவன் துப்பாக்கியுடன் ஓடி வந்து எமது பணிமனைக்குள் மறைந்திருக்கிறான் என அவர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் இதை மறுத்தபோதும், திருப்தியடையாத பொலீஸார் எமது பணிமனையைச் சோதனையிட்டனர்.

பொலீசாரின் குற்றச்சாட்டை நிரூபிக்கத்தக்க ஆதாரங்கள் எதுவும் [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சீரில்லாத பேருந்துச் சேவையும் தபாற்பொதிச் சோதனையும்

### வாசகர் திருமுகம்

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து நாளாந்தம் பளை, கொடிகாமம் வரை பஸ் சேவை நடைபெற்று வருகிறது; இது வரவேற்கத்தக்கது. இச் சேவையில் அரச ஊழியர், தனியார் ஊழியர், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினரும் பயணம் செய்வதுண்டு.

யாழ். அஞ்சல் நிலையத்தில் இருந்து கைதடி, சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், எழுதுமட்டுவாழ், பளை ஆகிய இடங்களுக்கான தபாற்சேவையும் இந்தபஸ் மூலமே நடைபெறுகிறது.

ஆனால் அண்மைக் காலமாக பஸ்சேவை சீரில்லாததால் மக்களும் அரச ஊழியர்களும், அஞ்சல் ஊழியர்களும் மணிக் கணக்கில் பேருந்து நிலையத்திலும், தரிப்பிடங்களிலும் கால் கடுக்க நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் தமது அன்றாடக் கடமைகளுக்குச் செல்ல முடியாது வீடுதிரும்புவதும், அஞ்சல் பகுதி ஊழியர்கள் தமது தபாற் பொதிகளைத் திரும்ப அலுவலகத்திற்கு எடுத்துச் செல்வதும் அடிக்கடி நடைபெறும் சம்பவங்களாகிவிட்டன.

இது குறித்து இ.போ.ச. அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, கப்பலில் வரும் பயணிகளை ஏற்றுவதாலும் மற்றும் இராணுவத்தினரின் தேவைக்கு பேருந்துகளைப் பயன்படுத்துவதாலும் அத்தவறு நடப்பதாகக் கூறப்பட்டது

இந்தப் பேருந்துச் சேவை பல நோக்கங்களை நிறைவேற்றுவதால் அதனைத் தப்பாது கிரமமாக நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

இவ்விடத்தில் இன்னொரு முக்கிய விடயத்தையும் உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

யாழ். பிரதம தபாலகத்தில் மூடப்பட்டு பேருந்தில் எடுத்துச் செல்லப்படும் தபாற் பொதிகளை — மிருசுவில், எழுதுமட்டுவாழ், பளை ஆகிய தபாலகங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் தபால் பொதிகளை — மிருசுவில் சந்தியில் அமைந்துள்ள பொலீஸ் சோதனை நிலையத்தில் வைத்துப் பொலீசார் வெட்டிச் சோதனை இடுகின்றனர். இதனால் தபாற் பகுதி ஊழியர்கள் பல சிரமங்களை எதிர் நோக்குவதைக் காண முடிகிறது.

அஞ்சல் விதிகளின் பிரகாரம் தபால் நிலையம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்படும் தபாற் பொதி சம்பந்தப்பட்ட நிலையத்தில் மட்டுமே திறந்து அவற்றிலுள்ள பொருள்கள் வெளியேஎடுக்கப்படலாம்; அல்லதுசோதனைசெய்யப்படலாம்.

இது விடயத்தில் தபாற்பகுதி மேலதிகாரிகள், பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுடன் பேசி, தபாற் பொதிகள் இடையில் வைத்து வெட்டப்படுவதைத் தவிர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தம்பகாமம் வீதி, பளை. ப. மதுரகாந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## 'டெங்கு' ஆபத்து

டொக்டர் வந்தாராம்; ஊசி ஏற்றினாராம்; காசு வாங்காமல் ஓடிவிட்டாராம் என்று சிறுவர்கள் நகைச் சுவையாகச் சுட்டும் நுளம்பு, உருவத்தில் சிறியது; ஆனால் மனிதனின் பெரும் எதிரிகளில் ஒன்று.

மலேரியா மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற உயிராபத்தான நோய்களைப் பரப்பும் மனித விரோதி அது. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் மலேரியா பெரும் உயிர்க் கொல்லிநோயாகவிளங்கியது. எனினும் உலகளாவிய மட்டத்திலும், உள்நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளாலும், புதிய மருந்து வகைகள் பயன்படுத்தப்பட்டதாலும் அது கட்டுப் படுத்தப்பட்டிருந்தது. நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்க வல்ல டி. டி. ரி, மலோத்தியோன் போன்ற நாசனிகள் இந்த வகையில் பெரிதும் உதவின.

எனினும் நுளம்புப் பெருக்கமும், அதன் தொல்லையும் மீண்டும் தலை தூக்கி இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் எச்சரித்திருந்தது.

நுளம்பினால் மலேரியா நோய் மட்டுமின்றி டெங்குக் காய்ச்சல் போன்ற புதிய வகை நோய்களும் பரவத் தொடங்கியுள்ளன.

இந்தியாவில் — புதுடில்லிப் பிரதேசத்தில் — டெங்குக் காய்ச்சலினால் 200 பேர் மரணமானதாகவும் கொழும்பில் — மேல் மாகாண சபைப் பிரதேசத்தில் 38 பேர் மரணமானதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

டெங்குக் காய்ச்சல் தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் வேகமாகப் பரவுவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் இந்தக் கொடிய நோய் பரவும் ஆபத்து உண்டு என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டு மக்களில் கணிசமானவர்கள் இடம்பெயர்ந்து சென்று வன்னியில் வசிப்பதால், அவர்களின் வீட்டுக் கிணறுகள் பயன்படுத்தப்படாமல் இருப்பதாலும், இராணுவ நடவடிக்கைகளின் போது உடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்கள் துப்புரவாக்கப்படாதிருப்பதாலும் இம்முறை வழமையைவிட நுளம்புத் தொல்லை அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மழைகாலம் வந்துவிட்டது. நீர் தேங்கியுள்ள இடங்களில் நுளம்புக் குடம்பிகள் உண்டாகி அது பெருகும். எனவே வீடுகள், வளவுகள், அலுவலகங்களில் தண்ணீர் தேங்கக் கூடிய ஏதுக்களை இயன்றவரை குறைப்பதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கலாம்.

இது விடயத்தில் எல்லோரும் தனிப்பட்ட முறையில் கவனம் எடுக்கவேண்டும். தம்மையும் தமது குடும்பத்தையும் சமூகத்தையும் கொடிய நோயிலிருந்து காப்பாற்றும் பெருந்தொண்டு ஒன்றினைச் செய்வதாக எண்ணிக் கொண்டு, வீடு வளவுகளையும் சுற்றுப்புறங்களையும் தண்ணீர் தேங்காத இடங்களாக்குவதற்குச் செயற்பட வேண்டும்.

குடாநாட்டில் சாதாரண நோய்களுக்கே மருந்துகளைப் பெறுவது பெரும் கஷ்டமாக உள்ளது. டெங்குக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவினால் சிகிச்சை பெறுவது மேலும் கஷ்டமாகும்.

எனவே, நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதே டெங்கு ஆபத்திலிருந்து தப்புவதற்கு உகந்த மார்க்கமாகும் இதில் குடாநாட்டின் ஒவ்வொரு பிரசையும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

---

ஈழ அகதிகள் படகு விபத்து:

# இறந்த சிறுவர்களில் அனேகமானோர் ஐந்து வயதுக்கும் உட்பட்டவர்கள்

மன்னார், ஒக். 18

இந்தியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு கவிழ்ந்ததில் இறந்த 14 பேரில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளே அனேகர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கள் இரவு மன்னாருக்கு அண்மையில் இச்சம்பவம் இடம் பெற்றது தெரிந்ததே.

இறந்த குழந்தைகளில் சிலரின் விவரங்கள் கிடைத்துள்ளன.

அவை வருமாறு:-

யோகேந்திரன் அனுஜா (10 மாதக் கைக் குழந்தை)

சிவாயிலுகுமரன் றீகன் (ஒரு வயதுக் குழந்தை)

வில்வராஜா விதுசன் (ஒரு வயதுக் குழந்தை)

பொன்னையா கிருபாகரன் (ஒரு வயதுக் குழந்தை)

நவரத்தினராஜா யோகேஸ்வரன் (இரண்டு வயது)

அகிலன் (மூன்று வயது)

நவரத்தினராஜா சிறீதரன் (ஐந்து வயது)

இவர்களின் படகு மன்னார் வலைப்பாடு கடற்கரையிலிருந்து திங்கள் இரவு 7.00 மணிக்குப் புறப்பட்டதாகத் தெரிகிறது. பயணிகளில் சிலர் நோய்வாய்ப்பட்ட தங்கள் பிள்ளைகளுக்குச் சிகிச்சை செய்வதற்காகவே தமிழகம் சென்றார்கள் எனவும் கூறப்படுகிறது. (இ-10)

## மிதிவெடியில் கால் இழந்தார்

யாழ்ப்பாணம் ஒக். 18

வீடு பார்க்கச் சென்றவர்களுக்கு உதவிக்குச் சென்ற பக்கத்துவீட்டுக்காரர், ஒருவர் மிதிவெடியில் சிக்கி இடது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

கோப்பாயில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை கனகரட்ணம் (வயது 49) என்பவரே படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து நேற்று வந்த பக்கத்து வீட்டுக்காரருக்கு அவர் வீடு பார்க்க உதவிக்குச் சென்றவரே காலை இழந்தார். (உ-15)

## பாடசாலை மாணவர்களின் தேசிய அ. அட்டைகள்

### யாழ். வந்து சேர்ந்தன

நவாலி ஒக். 18

யாழ். மாவட்டத்திலிருந்து பாடசாலைகள் மூலம் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் வந்து பெற்றுச் செல்லுமாறு ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

இப்போது விநியோகிக்கப்படும் அடையாள அட்டைகளில் பச்சைக் கோடுகளின் அமைப்பிலும், எண்ணிக்கையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. (இ-100)

## கரணவாயில் இரவுவேளை சூட்டுக்கு ஒருவர் பலி!

கரணவாய் வடக்கு சந்தை வீதியைச் சேர்ந்த ஒருவர் இரவு நேரத்தில் இனந்தெரியாத நபர் ஒருவரினால் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமானார்.

கடந்த செவ்வாய் இரவு 9 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் சின்னத்துரை நடராசா (வயது 40) என்பவரே மரணமானார்.

இவரது சடலம் கடந்த புதன்கிழமை (நேற்று முன் தினம்) மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் படையினரால் ஒப்படைக்கப்பட்டது.

இம் மரணம் குறித்து உடுப்பிட்டி மரண விசாரணை அதிகாரி திரு வி. நடராசா விசாரணை நடத்தினார்.

விசாரணையின் போது இறந்தவரின் மனைவி தவராணி (வயது 31) சாட்சியமளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சம்பவ தினம் இரவு இனந் தெரியாத ஒருவர் வந்து எனது கணவரைக் கூப்பிட்டு வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றார்.

அவர் அழைத்துச் சென்ற சிறிது நேரத்தில் இருவரும் வாக்குவாதப்படும் சத்தம் கேட்டது. தொடர்ந்து சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

சூட்டுச் சத்தங்களையடுத்து எனது கணவர் கூப்பிடும் சத்தம் கேட்கவே நான் வெளியில் சென்று பார்த்தேன். அப்பொழுது அவர் சாரம் முழுவதும் இரத்தம் தோய்ந்திருந்த நிலையில் விழுந்து கிடந்ததைக் கண்டேன்.

உடனே அவரைக் கூட்டி வந்து வீட்டில் படுக்க வைத்தோம். இச்சமயம் அவருக்குத் திடீரென விக்கல் ஏற்பட்டது- சிறிது நேரத்தில் அவர் மரணமானார். அவருக்கு எங்கு காயம் ஏற்பட்டது என நான் பார்க்கவில்லை.

மறுநாள் (புதன்) காலையில் இராணுவத்தினர் வந்து எனது கணவரின் சடலத்தை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

இறந்த எனது கணவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். கடந்த ஆண்டு என்னைத் திருமணம் செய்திருந்தார்— என்று கூறினார்.

வேறு சிலரின் சாட்சியங்களையும் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (உ-173)

## ஆட்சேபனையை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் எமது உறுப்பினர்கள் பொலீசாரை நோக்கிக் கைக்குண்டொன்றை வீசியதாகப் புதிய குற்றச்சாட்டைத் தெரிவித்தனர்.

திருகோணமலையில் அப்பாவித் தமிழ் மக்கள், தாக்கப்பட்டது குறித்தும் —

எமது திருகோணமலைப் பணிமனையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் குறித்தும் — உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மறுக்கப்பட்டுள்ள இந்தச் சம்பவம் குறித்து நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவருவது பற்றி ஈ. பி. டி. பி. சிந்தித்து வருகிறது. —இப்படி அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

---



# அம்பிகையைச் சரணடைந்தால் அஞ்சுவதற்கு எதுவுமே இல்லை

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்யவல்ல பரம்பொருளையே சிவபெருமான் என்று சைவம் பேசுகிறது. அப்பெருமானது கருணையையே நாம் சக்தி என வழிபடுகிறோம். மலரில் மணம்போலவும், மணியில் ஒளி போலவும் பரம்பொருளோடு பிரிப்பின்றி நிற்கும் அச்சக்திக்குப் பராசக்தி என்று பெயர். தேவர் முதலாக தாவரம் ஈறாக எல்லா உயிர்களுக்கும் நலம்செய்தற் பொருட்டு அந்தப்பராசக்தி எளிய நிலைகளில் பல்வேறு வடிவங் கொண்டருள்கிறாள்.

அம்பிகை பராசக்தி நிலையினின்றும் கருணையினால் உயிர்களுக்கு உதவி செய்வதற்காகத் துர்க்கை, இலக்குமி, சரசுவதி என்னும் வடிவங்களில் எளியளாய் வந்து அருள் புரிகின்றாள். உலக வாழ்க்கையில் நமக்கு இன்றியமையாது வேண்டப்படும் வீரம், செல்வம், ஞானம் ஆகியவற்றைத் தருகிறாள். இம்மூன்றும் உள்ள மனிதனே பூரணத்துவம் பெற்றவனாகின்றான்.

மனிதன் எந்தத் தெய்வத்தைத் தியானித்து உபாசனை செய்கின்றானோ அந்தத் தெய்வத்தின் அருளைப் பெறுவான். மன்னர்களும் படைவீரர்களும் போருக்குச் செல்லும் காலங்களில் கொற்றவை எனப்படும் துர்க்கையைவழிபட்டு வெற்றியைப் பெற்று மகிழ்ந்தனர். திருமகளை வழிபட்டு செல்வம் பெற்றுச் சிறந்தனர். கலைமகளைப் போற்றி கல்வியறிவு பெற்றுக் களித்தனர் என்கின்ற விவரத்தை தொல்காப்பியம் முதலிய நூல்கள் காட்டுகின்றன.

அடுத்து வரும் மூவர் இலட்சுமி அம்சமாகவும், அடுத்த மூவர் சரசுவதி அம்சமாகவும் துர்க்கை, இலக்குமி, சரசுவதி ஆகிய முப்பெருந் தேவியர்க்குரிய வழிபாடாக நவராத்திரி கொண்டாடப்படுகிறது.

பராசக்தியின் கருணையே மனதில் உறுதியையும், வாக்கில் இனிமையையும், நினைவில் தெளிவையும் ஏற்படுத்துகின்றது. நாம் செய்த வினைகளை அனுபவிக்க



வைத்து தெளிவு நிலைக்கு எம்மை உயர்த்திவிடுவதும் பராசக்தியின் தர்மமே ஆகும். இந்த உலக வாழ்வே அவள் படைத்த காவியமாகும். இன்பமும் துன்பமும், ஏற்றமும் இறக்கமும் ஆட்டமும் ஓட்டமும் இக்காவியத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகளாகும். இதில் நடிப்பவர்கள் நாங்கள் இயக்குபவள் அவள். ஆனால் நாம் வேண்டி நிற்பது எல்லாம் எம்மை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வாழவைக்கவேண்டும் என்பதே.

"நல்லதோர் வீணைசெய்தே அதை
நலன்கெடப் புழுதியில்
எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி"

என்று பாடினார் பாரதியார். இவ்வேண்டுகோளை உரிமையுடன் கேட்கவேண்டிய இடம் அன்னையின் சந்நிதிதான்.

நவராத்திரி நாயகியான அம்பாள் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் ஒளித்திருப்பாள். ஆனால் தான் இருக்கிறாள் என்பதை உணர வைப்பாள். இவ்வுலகில் அழகும் ஒழுங்கும் நிலவும்போது அதனூடாக அவளைக் காண முடிகிறது. இதனை முன்னிட்டு, இந்த மகாசக்தியை வழிபாட்டினால் நோக்கி நிற்கும் நாள்கள் நவராத்திரி தினங்களாகும்.

இந்நாள்களில் அர்ச்சியம், அலங்காரம், சுகந்தம், மலர்கள், அட்சதை, தூபம், தீபம், நிவேதனம், தோத்திரம் என்பவற்றால் அம்பாளைப் பிரீதிப்படுத்துகின்றோம். இந்நிலையில் உலகினர் செய்யும் பாவங்களை அவள் சீரணித்து விடுகின்றாள். இதனால் மன்னிப்புக் கிடைப்பதோடு இழந்தவற்றையும் பெற்றுக் கொள்கிறோம்.

**துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி**

பகைவர்களுக்கே பரிவு காட்டுகின்ற தன்மையினால் தான் மகிடாசுரனுக்கு எடுத்த எடுப்பிலேயே விஸ்வரூபம் காட்டி ஆட்கொண்டாள். தேவர்களும், மூவர்களும் மகிடாசுரவர்த்தனியைப் புகழ்ந்து போற்றி நின்றதோடு நவராத்திரி தினங்களில் இந்த மகிமையை உணர்ந்து வழிபடுவோர் அனைவர்க்கும் செல்வம், சுபீட்சம், புகழ், மனை, மக்கள், சம்பத்து அனைத்தும் பெருகவேண்டுமென்றும் வரங் கேட்டனர்.

எனவே, சைவ மக்களாகிய நாம் இந்நாள்களில் விரதம் இருந்து, தேவி தோத்திரங்களைப் படித்து, வீடுகளிலும் கொலு முதலிய நிகழ்வுகளை அமைத்து அம்பிகையைச் சரணடைந்து அதிக வரம் பெறுவோமாக. அவளிடம் சரணடைந்து விட்டால் அஞ்சுவதற்கு எதுவுமில்லை; அச்சம் வருவதுமில்லை. ★

## ஞானக்கதிர்

### ஒன்பது சக்திகள்

நவராத்திரி ஒன்பது நாட்களும் ஒன்பது சக்திகளை முறையே நினைந்து வழிபடும் விழா இதுவாகும். ஒன்பது சக்திகள் மகேசுவரி, கௌமாரி, வராகி, மகாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி, பிராமி, நரசிம்மி, சாமுண்டி எனப் படுவர். இவர்களில் முதல் மூவர் துர்க்கை அம்சமாகவும்,

## நாளை

ஐப்பசி 3
சனிக்கிழமை
திதி: ஸப்தமி
நண்பகல் 12 07 வரை.
நட்சத்திரம்: பூராடம்
பிற்பகல் 1.12 வரை.
மரணயோகம்
ராகுகாலம்: 9.02-10.32
சுபநேரம்: 3.02-4.32
[illegible]
பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மருத்துவப் பட்டதாரிகளுக்கு இரண்டிடங்களில் உள்ளகப் பயிற்சி!

## களுத்துறை, யாழ். ஆஸ்பத்திரிகளில்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தில் பயின்று வெளியேறிய ஐம்பத்தேழு மருத்துவப் பட்டதாரிகளுக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, களுத்துறை போதனா வைத்தியசாலை ஆகிய இரண்டிலும் சுழற்சி முறையில் உள்ளகப் பயிற்சி (Internship) வழங்கப்படும்.

இத்தகவலை யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

முன்னரைப் போல யாழ். பல்கலைக் கழக மருத்துவப் பட்டதாரிகளுக்கு யாழ். ஆஸ்பத்திரியிலேயே உள்ளகப் பயிற்சி வழங்குவதானால், இங்கு ஆகக் குறைந்தது நான்கு வைத்திய நிபுணர்களாவது பணிபுரிய வேண்டும்.

ஆனால் இங்கு இப்போது ஒரேயொரு வைத்திய நிபுணர் மட்டுமே பணியாற்றுகிறார். அதனாலேயே மருத்துவப் பட்டதாரிகளை வேறு மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டிய நிலைமை தோன்றியுள்ளதாக அறிய வந்தது.

முதலில், நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் உள்ளகப் பயிற்சி பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டதாயினும் —

அங்கும் அதற்குரிய வைத்திய நிபுணர்கள் போதியளவில் இல்லாததால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் யாழ். ஆஸ்பத்திரியில் மருத்துவப் பயிற்சியும் —

களுத்துறை ஆஸ்பத்திரியில் அறுவை வைத்தியப் பயிற்சியும் — வழங்கப்படும்.

மருத்துவப் பட்டதாரிகள் இந்தப் பயிற்சிகளை சுழற்சி முறையில் பெறுவர் (அ-3)

### தேர்தல் நடைபெற்று முடிந்த

# உத்தரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சி நீடிப்பு

புதுடில்லி, ஒக். 18

கடந்த வாரம் தேர்தல் நடத்தப்பட்டு புதிய சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தரப் பிரதேச மாநிலத்தில்தொடர்ந்து ஆறு மாதகாலத்துக்கு ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பது என்றும்—

அந்தக் காலப் பகுதியில் சட்டமன்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பது என்றும்—

இந்திய மத்திய அமைச்சரவை நேற்று முன்னிரவு முடிவு செய்தது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தில் எந்த ஒரு கட்சியோ அல்லது கூட்டணியோ தெளிவான அறுதிப் பெரும்பான்மை பெறாத குழப்ப நிலையில் ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பதே ஒரே வழி என அந்த மாநில ஆளுநர் ரொமேஷ் பண்டாரி சமர்ப்பித்த சிபார்சை ஆராய்ந்த பின்னர் அமைச்சரவை இவ்வாறு முடிவு செய்தது.

மேற்படி சட்டமன்றத் தேர்தலில் கூடிய இடங்களைப் பெற்றுள்ள தமது கட்சியை ஆட்சி அமைப்பதற்கு அழைக்கத் தவறியதை ஆட்சேபித்தும்—

ஜனாதிபதி ஆட்சியை நீடிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதை ஆட்சேபித்தும்—

உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது (உ-3)

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# மாடுகளுக்குசினைப்படுத்தல்

இறக்குமதி செய்யப்பட்ட அதிகுளிர் ஊட்டிய ஜேர்சி, பிரீசியன் இன மாடுகளின் விந்து மூலம் மாடுகளுக்கு தற்காலிகமாக சினைப்படுத்தும் நடைமுறை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கால்நடை வைத்திய நிலையங்களிலும், யாழ்ப்பாண கால்நடை வைத்தியசாலையிலும் இச்சேவையை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வைத்தியர்கள் தங்கள் பிரிவில் உள்ள சி. செ. மு. சி. செய்யும் ஊழியர்களுக்கு அதிகுளிர்ஊட்டிய விந்து மூலம் சினைப்படுத்தலுக்கான பயிற்சியை கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எம். தங்கராசாவிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

பண்ணையாளர்கள் தங்களின் வேட்கை வந்த பசுக்களை. கால்நடை வைத்திய நிலையங்களுக்கு கொண்டு சென்று சினைப்படுத்தலைச் செய்வித்துக் கொள்ள முடியும் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சபாரத்தினம்

(முன்னாள் நேரக்கணிப்பாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை)

திருமதி

### சபாரத்தினம் வள்ளியம்மை

காரைநகர், மடத்துக் கரையைச் சேர்ந்தவர்களும் தற்போது இடம் பெயர்ந்து மாங்குளத்தில் வசிதது வந்தவர்களுமான ஆறுமுகம் சபாரத்தினமும், அவரது மனைவி வள்ளியம்மையும் மாங்குளத்தில் 05 - 10 - 96 ஆம் திகதியும், 08 - 10 - 96 ஆம் திகதியும் காலமாகி விட்டார்கள்.

இவர்கள் ஆறுமுகம் - வள்ளியம்மையின் மகனும், மருமகளும், சின்னப்பரின் மருமகனும், மகளும், முத்தையாபிள்ளை, செல்வராணி, தர்மகுலசிங்கம், சிவஞானசுந்தரலிங்கம் ஆகியோரின் பெற்றோரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் தவமணிதேவி, கனகேஸ்வரி, வளர்மதி ஆகியோரின் மாமனும், மாமியாரும், தயாநிதி, சரத்குமார் கலாநிதி, விஜிதா, சுகந்தன், சுஜானா ஆகியோரின் பேரனும், பேர்த்தியும் ஆவார்கள்.

இவர்களின் தகனக் கிரியைகள் மாங்குளத்தில் நடைபெற்றன.

தகவல்:
ச. சிவஞானசுந்தரலிங்கம்.
(மகன்)

மூளாய் மத்தி,
சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு
அருகாமையில்,
மூளாய். (43214)


அடுத்த கட்ட..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திற்கு ஆள் திரட்டுவதன் அவசியத்தை உணர்த்தும் வகையிலான பத்திரிகையாளர்கள் மாநாட்டை அரசுத் தரப்பினர், படை அதிகாரிகள் அடிக்கடி நடத்துகின்றனர்.

இதைத்தவிர பத்திரிகைகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாக முப்படைகளிலும் சேரும்படி பிரசாரங்கள் மிகவும் விரிவான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பது என்றால் காலிமுகத்திடலில் — அதாவது இராணுவத் தலைமையகம் அமைந்துள்ள பகுதியில் — நீண்ட வரிசையில் இளைஞர் நிற்பதைக்காண முடியும்.

ஆனால் இன்று அத்தகைய நீண்ட வரிசையைக்காணமுடிவதில்லை—என்று பி. பி. ஸி குறிப்பிட்டது (உ-3)

அத்தியாவசிய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன் துறைமுகத்தில் மூவாயிரம் தொன்னுக்குக் குறைந்த எடையுள்ள கப்பல்கள் மட்டுமே தரிக்க முடியும். அதனாலேயே அங்கு குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் முழுவதையும் இறக்க முடியவில்லை என்று வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீரா தெரிவித்தார்.

இந்த நிலைமையைப் போக்குவதற்காக காங்கேசன் துறைமுகத்தில் இறங்குதுறையைப் புதிதாக நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பேச்சு—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது லண்டன்விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் நாடு திரும்பிய அவர் அதன் பின்னர் தனது கட்சிப்பிரமுகர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். (உ-3)

தமிழ்க்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பாக அரசுக்கு எதிராக உருவான எதிர்ப்புணர்வு ஆகியவை காரணமாக இந்திய அரசுடன் முரண்பட்டாகிலும் இந்திய அமைதிப்படையை வெளியேற்ற வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டு [illegible] கும். (உ)

# தீர்வுக்கான கதவுகளை அரசு படிப்படியாக மூடிவருகிறது

## "ஈழநாதம்" கூறுகிறது

கொழும்பு, ஒக். 18

இனப்பிரச்சினை தொடர்பான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான — தீர்வு காண்பதற்கான — கதவுகள் யாவும் அரசாங்கத்தினால் படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன.

– இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னியில் இருந்து வெளிவரும் "ஈழநாதம்" பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்ட தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்திருக்கின்றது.

"ரோய்ட்டர்" செய்திநிறுவனத்தை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு வே. பிரபாகரன் மற்றும் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறித்து எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"இத்தகைய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எந்த விதத்திலும் உதவப் போவதில்லை"

"உலக வரலாற்றில் விடுதலைப் போராட்டங்கள் குறித்து அவதானித்தால், எந்த ஓர் அரசும் போராளிகளை அழித்தொழிக்க அல்லது நசுக்க முயன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அப்போராளிகள் மேலும் வலுப்பெற்று, கிளைவிட்டு வளர்ந்திருப்பது தான் உண்மை என்பது தெரியவரும்" — இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-3-10)

முப்படைகளிலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் இன்றைய யுத்தத்தில் உயிரிழப்போர், ஊனமுறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கிராமப்புற இளைஞர்கள் கூடப் படைகளில் சேருவதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

இதனால்தான் அவர்களை கவரும் வகையில் பெரும் பிரசாரங்களையும் அறிவிப்புக்களையும் ஆட்சியாளர்களும் படை அதிகாரிகளும் மேற்கொண்டு வருவதாக கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிட்டார். (உ-3)

ஜெயலலிதா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஏழு வழக்குகள் தொடர்பாகவும் ஒரேயடியாக முன்பிணை அனுமதி கோரி ஒட்டுமொத்தமாக ஜெயலலிதா தாக்கல் செய்திருந்த மனுவை கடந்த 11 ஆம் திகதி உயர் நீதிமன்றம் நிராகரித்திருக்கையில், தற்போது தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஏழு மனுக்களையும் ஏற்க முடியாது என்று நீதிபதி ஏ இராமமூர்த்தி அறிவித்தார்.

இதையடுத்து செல்வி ஜெயலலிதா சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்பிணை அனுமதி கோரும் ஏழு தனித்தனி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. (உ-3)

## தபால்களைச் சேர்க்குக!

யாழ்ப்பாணம், ஒக். 18

வெளியூர் தபால்களை நாளை கப்பல் மூலம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் அவற்றை இன்று காலை 10 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் அஞ்சலிலிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் ஒக். 18

யாழ். மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழு நடத்திய சமய அறிவுப் போட்டியின் பரீட்சை முடிவுகள் நாளை வெளியிடப்படும் என்று குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# தெற்கு கிளர்ச்சியாளர்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற தேவை அரசாங்கத்திற்கும், இராணுவத்திற்கும், நாட்டு மக்களுக்கும் சம அளவில் உள்ளது அப்படி இல்லையேல் இந்நோக்கம் நிறைவேறாது.

"அரசுக்கும், அரசினால் அமைக்கப்பட்ட இராணுவத்துக்கும் இத்தகைய தேவை இருப்பது புலனாகின்றது. ஆனால் பொது மக்கள் அத்தகைய தேவை தங்களுக்கும் இருப்பதை உணர்வதாகத் தெரியவில்லை.

"இராணுவத்தில் சேருவதற்கு இளைஞர்கள் பின்னடிப்பதைப் பார்க்கும் சூழ்நிலையிலேயே நான் இக்கருத்தை வெளியிடுகின்றேன்.

"மரணமடைய நேரிடும் அல்லது ஊனமடைய நேரிடும் என இளைஞர்கள் எண்ணக்கூடும். ஆனால் இராணுவத்தில் சேரும் அனைவரும் யுத்தத்தின் போது மரணமடைவதில்லை; இராணுவத்தில் சேராமல் விடுவதால் மாத்திரம் மரணத்திலிருந்து தப்பி விடவும் முடியாது.

"எனவே தாய் நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்வது எவ்வளவோ பெறுமதியானது என்பதை இளம் சமுதாயம் உணரவேண்டும்.

"தென்னிலங்கையில் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட இளைஞர்களும் இராணுவத்தில் சேரலாம் 'தாய் நாடு அல்லது மரணம்' என பாரிய சுவரொட்டிகள் நாடெங்கும் ஒட்டப்பட்டிருந்ததை நான் கண்டுள்ளேன். இப்படி விளம்பரப்படுத்தியோர் நாட்டுக்காக அவர்கள் சேவை தேவைப்படும் இவ்வேளையில், நாட்டில் அமைதியை உருவாக்க முன்வரவேண்டும்; பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகள் என்னும் புற்றுநோய் ஒழிக்கப்படவேண்டும்"—இவ்வாறு இராணுவத் தளபதி கூறினார்.

கடந்த 15 ஆண்டுகள் நடைபெற்று வரும் யுத்தத்திற்கு முடிவுகாண முடியாத சூழ்நிலையில் இராணுவத் தளபதியின் வேண்டுகோளுக்கு இளைஞர்களிடமிருந்து உரிய ஒத்துழைப்புக் கிடைக்கும் என்பது சந்தேகத்திற்குரியதே என அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

குறிப்பாக அண்மையில் முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது கொல்லப்பட்ட சிப்பாய்களின் சடலங்களைக் கூட இதுவரை தேடி எடுக்க முடியாத இராணுவத்திற்கு —ஆயிரத்திற்கு மேற்பட்ட சிப்பாய்களுக்கு என்ன நேர்ந்தது எனத் தெரிவிக்க முடியாத இராணுவத்திற்கு— இளைஞர்களைச் சேர்ப்பதென்பது இலகுவான காரியமாக இராது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

— இவ்வாறு பி. பி ஸி. சிங்கள சேவை மேலும் தெரிவித்தது. (உ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 18-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org